மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுள் தண்டனை குறைக்கப் பட்டவர்கள்

* 172 வினா—**திரு. கே. டி. கே. தங்கமணி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) இவ்வாண்டு (1972-73) தூக்கு தண்டனை பெற்றவர்களுள் எவருக்கேனும் மன்னிப்பு கொடுத்து ஜென்ம தண்டனையாக மாற்றப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ)

1972

1. மரண தண்டனை விதிக்கப்பெற்றவர்கள்	..	32 பேர்
2. கருணை அடிப்படையில் தண்டனை குறைக்கப் பெற்றவர்கள் :—		
மாநில அரசால்	..	11 பேர்
இந்திய அரசால்	..	23 பேர்
3. இவர்களில், சுதந்திர தின வெள்ளி விழாவையொட்டித் தண்டனை குறைக்கப்பெற்றவர்கள் :—		
மாநில அரசால்	..	6 பேர்
இந்திய அரசால்	..	23 பேர்

1973

1. 1973 நவம்பர் வரையில் மரண தண்டனை விதிக்கப் பெற்றவர்கள்	..	20 பேர்
2. கருணை அடிப்படையில் தண்டனை குறைக்கப் பெற்றவர்கள் :—		
மாநில அரசால்	..	31 பேர்
இந்திய அரசால்	..	16 பேர்
3. இவர்களில், சுதந்திர தின வெள்ளி விழாவையொட்டித் தண்டனை குறைக்கப்பெற்றவர்கள் :—		
மாநில அரசால்	..	31 பேர்
இந்திய அரசால்	..	16 பேர்

1974 ஜனவரி 25]

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த ஜன்ம தண்டனைப் பெற்றவர்களுக்கு வெள்ளி விழா சமயத்தில் கிடைக்கக்கூடிய மார்க்குகள் ஏற்கனவே அவர்களுக்கு 'ரெமிஷன்'க்காக கிடைத்த மார்க்குகளோடு சேர்க்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதனால் 10 ஆண்டுகளுக்கு மேலும் சிறையில் இருக்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள். இது சம்பந்தமாக என்ன நிலை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த 'ரெமிஷனை' மாநில அரசோ மத்திய அரசோ கொடுக்கிறபோது, அதைப் பயன்படுத்தி விடுதலை செய்வதாக இருந்தால் 10 ஆண்டுகளுக்குக் குறைவாக சிறைச்சாலைகளில் இருப்பவர்கள் கூட வெளியேறி விடுகிறார்கள். அதனால் தான் 'மினிமம் 10 வருஷம் அல்லது 2/3 சென்டன்ஸ்' என்று கொண்டு வந்தோம். அந்த விதி அவர்களுக்குப் பயன்படுமானால் நிச்சயம் விடுதலை செய்யலாம்.

(முற்பகல் 9-30)

திரு. கே. டி. கே. தங்கமணி : ஜன்ம தண்டனை பெற்றவர்களை ஒரு சிறையிலிருந்து மற்றொரு சிறைக்கு மாற்றுகிறார்கள். ஆனால், ஜன்ம தண்டனை பெற்று அவர்கள் அப்பீல் செய்து கொண்டிருந்தாலும் கூட அவர்கள் மாற்றப் படுவதாக சொல்லப்படுகிறது. அதைப்பற்றி அரசு ஏதாவது தெரிவிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய மத்திய சிறைகளிலே மாற்றம் செய்வது எண்ணிக்கையைப் பொறுத்திருக்கிறது. மாற்றம் கேட்பவர்கள் தென் மாவட்டத்திலிருந்து வருபவர்கள். தென் மாவட்டத்தில் குறிப்பாக மதுரை மத்திய சிறையில் இடப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தினால் வேறு சிறைக்கு மாற்றப் படுகிறார்கள். அவர்கள் கேட்ட சிறைக்கு மாற்றுவதிலே கொஞ்சம் கஷ்டம் இருக்கிறது. வசதிக்கு ஏற்றபடி அவரவர்கள் ஊருக்குப் பக்கத்தில் உறவினர்கள் சென்று பார்க்கக்கூடிய நிலையில் சிறையிலே வைக்கவேண்டும் என்று கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஜன்ம தண்டனை பெற்ற கைதிகள் 10 வருஷங்களுக்கு மேல் சிறை தண்டனை அனுபவித்தால் அவர்களை விடுதலை செய்யலாம் என்ற ஒரு நியதி இருக்கிறது. அதே மாதிரி அவர்களுடைய காண்டக்ட் அடிப்படையில்,

ஜெயிலில் நல்ல முறையில் நடந்து கொண்டால், அதற்கென்று இருக்கிற கமிட்டி பரிந்துரை செய்தால் அந்த அடிப்படையில் விடுதலை செய்வதற்கு வழிவகைகள் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது அப்படித் தான் செய்து கொண்டு வருகிறோம். ஒரு நபர் 2/3 தண்டனை அனுபவித்து விட்டால், கிட்டத்தட்ட அது 9, 10 ஆண்டுகள் வரும். உடனே அது கமிட்டிக்குப் போகிறது. இந்தக் கமிட்டி சிபார்சு செய்தால் பெரும்பாலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. சில சமயங்களில் 'கிரேவ் அஃபென்ஸஸ்', பட்டப் பகலிலே நேரடியாக 'டேலைட் கோல்ட் பிளட் மர்டர்' இப்படிப்பட்ட கேஸ்களைப் பொறுத்தவரைக்கும் மட்டும் நாம் அதை மறுக்கிறோம்.

திரு. எம். முத்தையா: கீழவெண்மணி சம்பவத்தில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து அவர்களுக்கு ஆயுள் தண்டனையாக மாற்றியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எற்கெனவே அப்பீல் செய்து இருப்பதாக மன்றத்தில் நான் அறிவித்திருக்கிறேன்.

Honorarium for inmates of Thanjavur Chatram

* 173 *Q.*—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state the reasons for the stoppage of honorarium to the inmates of Thanjavur Chatram during September 1973?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தஞ்சாவூர் சத்திரம் நிருவாகத்திலுள்ள எவருக்கும் மதிப்பு ஊதியம் (honorarium) வழங்கப்படுவதில்லை.

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் சத்திரம், ஒரத்தநாடு சத்திரம் எந்த நிர்வாகத்தின் கீழ் வருகிறது ? ஆண்டு ஒன்றுக்கு அரசுத் தரப்பில் எவ்வளவு செலவழிக்கப்படுகிறது. வருவாய் எவ்வளவு, செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.